**<u>மாங்காடு நகராட்சி</u>**

**<u>நகர்மன்ற சாதாரணக் கூட்டம்</u>**

2024ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23.12.2024ம் தேதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு மாங்காடு நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெற உள்ள நகர்மன்ற சாதாரணக்கூட்ட பொருள் நடவடிக்கை விவரம்

---

குறள்- தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு..

## குறள் விளக்கம் :

மணலில் தோண்டிய அளவு சிறு குளத்தில் நீர் ஊறும்; மக்கள் கற்ற அளவே அறிவும் வளரும்.

---***-----

**பொருள் எண்.1**

நகராட்சி ஆணையரின் நவம்பர் 2024 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.2**

நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான நவம்பர் 2024 மாதத்திற்கான வரவு மற்றும் செலவுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.3**

நகராட்சி அலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ள முக்கிய அரசு கடிதங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.4**

இந்நகராட்சியில் மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகளில் ஒப்பந்ததாரர்களின் பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்படும் வருமான வரி மற்றும் சேவை வரி தொகையினை உரிய தலைப்புகளில் செலான் மூலம் செலுத்தவும் மற்றும் செலுத்தப்பட்ட வருமான வரி மற்றும் சேவை வரி உள்ளிட்ட தொகைகளுக்கான 2024-2025ம் ஆண்டின் 2, 3 மற்றும் 4ம் காலாண்டுகளுக்கு E-Filing பணி மேற்கொள்ளவும் அரசு அங்கீகாரம் பெற்ற தமிழ்நாடு மாநில கணக்கியல் (ம) வரி சேவைகள் கூட்டுறவு சங்கம் லிட், XNC895 நிறுவனம் என்பவருக்கு கீழ்க்கண்ட விவரப்படியான செலவினம் ரூ.54.000/-திற்கு மன்றத்தின் அனுமதிக்காக மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| TDS for Non Salary for a Quarter ending (Rs.6000 x 3 quarter) | - | Rs.18000 |
| GSTR7 (contractor payment) filing a Month (Rs.3000x6 months) | - | Rs.18000 |
| GSTR7 (Nontax) filing a Month (Rs.3000x6 months) | - | Rs.18000 |
| **Total** | - | **Rs.54000** |

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்

## பொருள் எண்.5

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் செயல்முறை உத்திரவின்படி, புதிதாக நியமனம் செய்யப்பட்ட ஆணையாளர் (நிலை II) செல்வி.ரா.நந்தினி அவர்கள் கடந்த 27.08.2024 முதல் 21.09.2024 வரையிலான காலத்தில் தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனம் கோவை பயிற்சி வகுப்பில் கலந்துக் கொண்டதற்கான பயிற்சி கட்டணம் தொகை ரூ.20000/-ஐ இந்நகராட்சி ஆணையாளர் செல்வி.ரா.நந்தினி அவர்கள் கோவை தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனத்திற்கு ரொக்கமாக செலுத்தியுள்ளார். அதன்படி, அன்னார் ரொக்கமாக செலுத்திய தொகை ரூ.20000/- அன்னாருக்கு காசோலை மூலம் வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அகு- நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் எண்.6

இந்நகராட்சியில் ஒப்பந்ததாரர்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு வழங்கப்பட்ட பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்பட்ட வருமானவரி மற்றும் TDSக்கான TDS TRACES-ல் 2021-2022, 2022-2023 மற்றும் 2023-2024 ஆகிய 3 ஆண்டுகளுக்கு மொத்தம் Default outstanding Demand தொகை ரூ.453420/-ஆக உள்ளதை தகுதிவாய்ந்த தணிக்கையாளர் மூலம் நிவர்த்தி செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.57000/ற்கு நகர்மன்றத் தீர்மானம் எண். 708 நாள்.30.10.2024ல் ஒப்புதல் அளிக்கப்பட்டதின்படி, அவசர அவசியம் கருதி மேற்படி வருமானவரி தணிக்கை பணிகளை செய்யும் தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்ட விவரப்படி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய தமிழ்நாடு மாநில கணக்கியல் மற்றும் வரி சேவைகள் கூட்டுறவு சங்கம் லிட் XNC – 895 என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி, பணி முடித்தமைக்கும், அதற்கான செலவினம் ரூ.56,640/-ஐ மேற்படி நிறுவனத்திற்கு வழங்கவும், மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண | வேலையின் விவரம் | ஒப்பந்ததாரர் விவரம் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | TDS corrections for Based on Records and Demand, TAN: CHEC15800B Clearing of TDS outstanding Demand on 11.09.2024 Rs.15.09.400- Clearing of TDS out standing | தமிழ்நாடு மாநில கணக்கியல் மற்றும் வரி சேவைகள் கூட்டுறவு சங்கம் லிட் XNC – 895, 23.1, முதல் தளம், அழகிரி நகர் 5வது தெரு, 100 அடி ரோடு, வடபழனி சென்னை-26 | குறைவு |
| | | T. Arunachalam & Co, Chartered Accountants, D.No.50. Plot No. Om sakthi Street, ICF Colony Extn., Srinivasa Nagar, Ayapakkam | அதிகம் |
| | | Itta Parthasarathy, Chartered Accountants, 187/(94). பிராட்வே, 2வது தளம், சென்னை-108 | அதிகம் |

அ.கு- பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி முடித்தமைக்கும் பட்டியல் வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண்.7

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 வார்டுகளில் உள்ள தெருக்களில் பொது சுகாதார பிரிவின் வாயிலாக திடக்கழிவு மேலாண்மை பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணியினை தனியார் மயம் வாயிலாக வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் தினந்தோறும் உருவாகும் குப்பகைளை தரம்பிரித்த மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து வாங்கப்படுகிறது .

அவ்வாறு தரம் பிரித்து வாங்கப்படும் குப்பைகளை நகரில் உள்ள நுண்ணுர செயலாக்க மையம் (MCC) கொண்டு சென்று உரம் தயாரித்தல் பணிகள் மற்றும் வளம்மீட்பு மையம்(RRC) கொண்டு சென்று மறுசுழற்சி செய்ய இயலாத பொருட்களை சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு அனுப்புதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகிறது. நமது நகராட்சியில் இரண்டு புதிய MCC மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. MCC மற்றும் RRC மையத்தில் பணிபுரிய 6 தூய்மை பணியாளர் தேவைப்படுகின்றனர். எனவே 3 மையங்களுக்கும் 15 தூய்மை பணியாளர் தேவைப்படுகின்றனர். தற்போது நமது நகராட்சியில் நிரந்தர தூய்மை பணியாளர்கள் குறைவான அளவில் உள்ளனர். எனவே மேற்கண்ட MCC மற்றும் RRC மையங்களில் உரம் தயாரித்தல் பணிகள் மேற்கொள்ள இயலவில்லை. ஆனால் தற்போது மேற்காணும் பணிகள் மேற்கொள்வது அவசியமான ஒன்றாகும்.

எனவே MCC மற்றும் RRC மையங்களில் பணிகள் மேற்கொள்ள 15 தூய்மை பணியாளர்களை தனியார் மயம் மூலம் பணியமர்த்த வேண்டியுள்ளது எனவே 15 தூய்மை பணியாளர்களை மாவட்ட ஆடசியர் அவர்களின் தினக்கூலி விலைவிகிதத்தின் அடிப்படையில் டிசம்பர் 2024 முதல் மே 2025 வரை ஆறுமாதங்களுக்கு மகளிர் சுய உதவிக்குழுக்கள் வாயிலாக நகர்மன்றத்தின் அனுமதி பெற்று பணியமர்த்தி கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.15.00/- இலட்சம் மேற்கொள்ள மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதி வழங்கலாம்

பொருள் எண்.8

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணிகளுக்காக M/s. Blooming Recycles நிறுவனம் மூலம் 52 DBC பணியாளர்கள் வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது., பொது மக்களின் சுகாதார நலன் கருதியும் அவசர அவசியம் கருதியும் மேற்கண்ட நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் அதே விலை விகிதத்தில் 01.11.2024 முதல் 31.12.2024 வரை இரண்டு மாத காலத்ததிற்கு பணி நீட்டிப்பு வழங்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணிமேற்கொண்டமைக்கு பின்னேற்பு நகர்மன்றத்திற்கு மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.9

மாங்காடு நகராட்சியில் வடகிழக்கு பருவ மழையினை முன்னிட்டு மழைகாலம் என்பதால் கொசுக்களின் உற்பத்தியை கட்டுப்படுத்த பொதுசுகாதார கொசு ஒழிப்பு பணிகளுக்கு தேவையான பொருட்களான Pyrethrum, Temephos, BTI ஆகிய பொருட்கள் சப்ளை செய்யும் பணிக்கு தமிழ்நாடு மெடிக்கல் சர்வீஸ் கார்ப்பரேசன் நிறுவனத்திடமிருந்து அனுமதி பெற்ற திருவாளர். ஆதித்யா ஏஜென்சி என்ற நிறுவனத்திற்கு நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும், பட்டியல் தொகை வழங்கியமைக்கும் மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மேற்படி பொருட்களை கொள்முதல் செய்ததற்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும், பட்டியல் தொகை வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.10

மாங்காடு நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் கீழ் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்படி மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டு மக்கும் குப்பைகள் உரமாக தயாரிக்கப்படுகிறது. மக்காத குப்பைகளில் மறு சுழற்சி செய்யக்கூடிய குப்பைகள் மறு சுழற்சி செய்ய அனுப்பப்பட்டுள்ளது. குப்பைகளை தரம் பிரித்தது போக அனைத்தும் கலந்த பிரிக்க இயலாத குப்பைகள் உரக்கிடங்கு பகுதியில் சேகரிக்கப்பட்டு வருகிறது.

இந்த குப்பைகள் சேகரிக்கப்படும் இடத்தில் சுடுகாடு மயானம் உள்ளது. இந்த சுடுகாடு பகுதிக்கு செல்ல வழி இல்லாமல் குப்பைகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் அருகில் Electricity Board உள்ளது. இதனால் அங்கு சேர்ந்துள்ள குப்பைகளை அவசர அவசியம் கருதி அகற்றப்படுதல் வேண்டும். எனவே இந்த இதர கழிவுகளை அகற்றுவதற்கு தோராய செலவினம் ரூ.9,50,000/-க்கு நகர்மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.11

தமிழ்நாடு நகரப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023-ன்படி மாங்காடு நகராட்சி பகுதிகளில் நடைபெறும் வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம் வழங்கிட உரிமம் வழங்குவதற்கான நிறுவனங்களின் வகைப்பாட்டினை அட்டவணை I, II, மற்றும் III-ல்வகைப்படுத்தி குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச கட்டணங்களின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தகுந்தது போல் நிர்ணயம் செய்து உரிமம் வசூலித்து உரிமம் வழங்கிட வேண்டியுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023-ல்தொழில் உரிமங்கள் வழங்குவது குறித்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள

நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் படி இந்நகராட்சி பகுதியில் இயங்கிவரும் தொழில்களுக்கு கீழ்கண்ட விவரப்படி பட்டியலில் குறிப்பிட்டுள்ள கட்டண விகிதத்தில் உயர்த்தி வசூலிக்கப்படும்.

**வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்கான உரிமம் :-**

- வர்த்தக உரிமத்திற்கான விண்ணப்பம்-(1) அட்டவணைகள் I, II, மற்றும் III-ல் குறிப்பிட்டுள்ள, பொது அல்லது தனியார் என எந்தவொரு வர்த்தகம் அல்லது வியாபாரத்தினையும் ஆணையாளரால் வழங்கப்பட்ட ஒரு உரிமமின்றி நகராட்சி எல்லைக்குள் எவரும் மேற்கொள்ளக்கூடாது.
- அத்தகைய உரிமம் வழங்குவதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும், திருநின்றவூர் நகர் மன்றத்தால் வரையறுக்கப்பட்ட கட்டணத்துடன் படிவம் 1-ல் ஆணையாளருக்கு சமர்பிக்கப்பட வேண்டும் மற்றும் பின்வரும் ஆவணங்கள் அத்துடன் இணைக்கப்பட வேண்டும்.
- தனி நபரைப் பொறுத்த வரையில் ஆதார் அட்டை மற்றும் நபர்களின் குழு அல்லது நிறுவனத்தினைப் பொறுத்தவரையில் நிலையான கணக்கு எண் அட்டை அல்லது சான்றிதழ் போன்ற அடையாள சான்று.
- உரிமம் விண்ணப்பிக்கப்படுகிற வர்த்தகம் அல்லது வியாபாரத்தின் முகவரியை தெளிவாக காண்பிக்கும் குத்தகை பத்திரம் அல்லது வருமானம் ஒப்பந்தம் அல்லது சமீபத்திய சொத்து வரி ரசீது அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விவர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.
- செல்லுபடியாகக் கூடிய முகவரிச்சான்று எதுவும் விண்ணப்பதாரரிடம் இல்லையெனில், அவர் படிவம் 17-இல் பிரமாணம் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்பிக்க வேண்டும்.
- அட்டவணை 1-ன் கீழான விண்ணப்பங்களுக்கு, நிறுவனத்தின் வகைப்பாடு குறித்து தீர்மானிப்பதற்கு உதயம் பதிவுச்சான்றிதழ் அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விபர அறிக்கை அல்லது வருமான வரி விபர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.
- உதயம் பதிவுச் சான்றிதழ் அல்லது எந்தவொரு வரி விபர அறிக்கையும் விண்ணப்பதாரரிடம் இல்லையெனில், அவர் உரிமம் கோரப்படுகிற நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்றளிக்கும் படிவம் 18-இல் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்பிக்க வேண்டும்.
- அதன் பயன்பாட்டுக்கு உள் விதி (1)-ன் கீழ் உரிமம் தேவைப்படுகிற ஒவ்வொரு இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவரும், அத்தகைய நோக்கங்களுக்காக அந்த இடம் பயன்படுத்தப்படுவதற்கு முன்பு 45 நாட்களுக்கு குறையாமலும்,90 நாட்களுக்கு மிகாமலும் அத்தகைய உரிமத்திற்காக ஆணையாளரிடம் விண்ணப்பிக்கவேண்டும்.
- தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண் 289 விதி (5)ன் கீழ் வழங்கப்பட்ட உரிமம், பிரிவு (6)-ல் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டதாகும்.
- உரிமம் புதுப்பிப்பதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் உரிமம் காலாவதியாவதற்கு மூன்று மாதத்திற்கு முன்பு மன்றத்தால் நிர்ணயிக்கப்படுகிற உரிமக் கட்டணத்துடன் படிவம் 1-ல் ஆனையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- உரிமம் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் போது உரிமம் பெறுபவரால் நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய வரி அல்லது கட்டணம் எதுவும் நிலுவையில் இருக்கக்கூடாது.
- அட்டவணைகள் I, II, III மற்றும் IV-ல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமக் கட்டண விகிதங்கள் 01.07.2024 தேதி முதல் அமுலுக்கு வரும்.

குறிப்பு .மார்ச் துவங்கி தேதிமுதல்ஏப்ரல்ஆண்டுநிதிஎந்தஒரு (31) தேதிமுடிவடையும்.

## அட்டவணை I

[See rules 289(1), (2) and (5)]

**1. பொருந்தக்கூடிய தன்மை**

1948 -ம் ஆண்டு தொழிற்சாலை சட்டம் )1948 -ம் ஆண்டு மத்தியச் சட்டம் LXIII) 1951-ம் ஆண்டு தொழிற்சாலைகள் ) சட்டம் (மேம்பாடு மற்றும் முறைப்படுத்துதல்)1951-ம் ஆண்டு மத்தியச் சட்டம் 65), 1959 ஆம் ஆண்டு படைக்கலச் சட்டம் )1959-ம் ஆண்டு மத்தியச் சட்டம் 54), 1884-ம் ஆண்டு வெடிபொருட்கள் சட்டம் )1884-ம் ஆண்டு மத்தியச் சட்டம் IV) மற்றும் 1934-ம் ஆண்டு பெட்ரோலிய சட்டம் )1934-ம் ஆண்டு மத்தியச் சட்டம் XXX) ஆகியவற்றின் கீழ் உரிமம் வழுங்கப்படாத பொருள் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள எந்தவொரு தொழில் அல்லது தொழிற்சாலை அல்லது நிறுவனத்திற்கும் இது பொருந்தும்.

**2. உரிமக்கட்டணம் :**

அ) குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான உரிமக் கட்டணம், 2006 ஆம்ஆண்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டத்தின் படியான(2006-ம் ஆண்டு மத்தியச் சட்டம் 27), அத்தகைய தொழில் நிறுவனங்களின் வகைப்பாட்டின் அடிப்படையில் விதிக்கப்படும்.

ஆ) அந்த தொழிற்சாலையின் வகைப்பாடு பொருட்கள் மற்றும் சேவைகள் வரி எண் அல்லது சமீபத்திய வருமான வரி விபர அறிக்கையினை பயன்படுத்தி தீர்மானிக்கப்படும் விண்ணப்பதாரர் ஒரு செல்லுபடி ஆகக்கூடிய உதயம் பதிவு சான்றிதழ் மற்றும் வரி விவர அறிக்கைகளை கொண்டிருக்கவில்லை எனில் உரிமம் கோரப்படுகிற தொழில் நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்று அளித்து படிவம் 17 இல் உள்ள பிரமாண பத்திரம் ஒன்றை அவர் சமர்ப்பிக்க வேண்டும்.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023-ல் குறு, சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் பெரிய தொழிற்சாலைகளுக்கு உரிமம் வழங்கிட உரிமை கட்டணம் நிர்ணயம் செய்திட குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச தொழில் உரிமை கட்டணங்களுக்காக பட்டியல்

**(A) குறு தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 1500/- | 3500/- |

**(A) சிறு தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 3500/- | 5000/- |

**(B) நடுத்தர தொழில் நிறுவனங்கள்(ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 7500/- | 10000/- |

**(C) மற்றவை (அல்லது) பெரிய தொழிற்சாலை(ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 10000/- | 35000/- |

**மேற்கண்ட அரசு விதிகளின்படி நகராட்சியால் கீழ்க்கண்டவாறு தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.**

**வர்த்தகங்கள் / வியாபாரங்கள்(ஒருவருடத்திற்கானகட்டணம்)**

| வ.எண் | வர்த்தகங்கள் / வியாபாரங்கள் பட்டியல் | குறு தொழில் நிறுவனங்கள் எனில் 01.09.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் (ரூபாயில்) | சிறு தொழில் நிறுவனங்கள் எனில் 01.09.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் (ரூபாயில்) | நடுத்தர தொழில் நிறுவனங்கள் எனில் 01.09.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் (ரூபாயில்) | மற்றவை (அல்லது) பெரிய தொழிற்சாலை எனில் 01.09.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் (ரூபாயில்) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | தையல் பொருட்கள் உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 8000/- | 10000/- |
| 2 | தையல் இயந்திரங்கள் உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 8000/- | 10000/- |
| 3 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னனு தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 9000/- | 12000/- |
| 4 | அனைத்து வகையான மின் மோட்டார்கள் மற்றும் பம்புகளை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 5 | மின்சார மோட்டார்கள் மற்றும் பம்புகளை சேமித்து வைத்து விற்பனை செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 6 | கல் உடைத்தல் மற்றும் நொறுக்குதல் | 2000/- | 4000/- | 7500/- | 8000/- |
| 7 | காகித தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 7500/- | 8000/- |
| 8 | அனைத்து வகையான உலோகங்களையும் உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 7500/- | 8000/- |
| 9 | அனைத்து வகையான கொள்கலன்களையும், பாத்திரங்களையும் உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 7500/- | 8000/- |
| 10 | அனைத்து வகையான மோட்டார்கள் (மின்மோட்டார்கள் அல்லாத) மற்றும் | 2500/- | 5000/- | 9000/- | 12000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பம்புகளை உற்பத்தி செய்தல் | | | | |
| 11 | அனைத்து வகையான தொழிற்சாலை இயந்திரங்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 9000/- | 12000/- |
| 12 | மோட்டார் வாகன உதிரி பாகங்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 8000/- | 10000/- |
| 13 | அனைத்து வகையான கட்டுமான பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 7500/- | 10000/- |
| 14 | அனைத்து வகையான பொறியியல் பணிகள் | 2000/- | 5000/- | 8000/- | 10000/- |
| 15 | செங்கல் சூளைகள் | 1750/- | 4000/- | 8000/- | 10000/- |
| 16 | அனைத்து வகையான ஆட்டோமொபைல் உதிரி பாகங்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 7500/- | 10000/- |
| 17 | அனைத்து வகையான ஒப்பனைப் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 7500/- | 10000/- |
| 18 | அனைத்து வகையான நாட்டு மருந்துகள் ஒப்பனைப் பொருட்கள் மற்றும் மூலிகை பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 4000/- | 8000/- | 10000/- |
| 19 | அனைத்து வகையான கட்டுருவாக்க பணிகள் (Fabrication Works) | 2000/- | 4000/- | 8000/- | 10000/- |
| 20 | துருப்பிடிக்காத எஃகு வேலை மற்றும் மெருகூட்டல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 21 | அனைத்து வகையான ரசாயன பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 22 | அனைத்து வகையான மருத்துவ உபகரணங்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 23 | அனைத்து வகையான சலவை மற்றும் சுத்தப்படுத்தும் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 8000/- | 10000/- |
| 24 | அனைத்து வகையான இயந்திர எண்ணெய்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 8000/- | 10000/- |
| 25 | கொதிக்கலன் உற்பத்தி | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செய்தல் | | | | |
| 26 | காற்றுப்பதனிகளை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 15000/- |
| 27 | அனைத்து வகையான கண்ணாடி பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 8000/- | 10000/- |
| 28 | அனைத்து வகையான எழுது பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 8000/- | 10000/- |
| 29 | அனைத்து வகையான ரப்பர் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 8000/- | 10000/- |
| 30 | அனைத்து வகையான வீட்டு உபயோகப் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 8000/- | 10000/- |
| 31 | பூச்சிக்கொல்லிகளை உற்பத்தி செய்தல் | 3000/- | 5000/- | 9000/- | 15000/- |
| 32 | பேட்டரிகளை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 8000/- | 10000/- |
| 33 | மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 8000/- | 10000/- |
| 34 | அணிகலன்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 8000/- | 10000/- |
| 35 | இசைக்கருவிகளை உற்பத்தி செய்தல் | 2000/- | 3000/- | 7500/- | 10000/- |
| 36 | துப்புரவு பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 3500/- | 7500/- | 10000/- |
| 37 | சுண்ணாம்பு கால்வாய் | 1500/- | 3500/- | 8000/- | 12000/- |
| 38 | அனைத்து வகையான தென்னை நார் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 39 | அனைத்து வகையான ஆடைகள் / துணிகள் / ஜவுளிகளை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 8000/- | 12000/- |
| 40 | அனைத்து வகையான தோல் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 8000/- | 12000/- |
| 41 | அனைத்து வகையான மர / பிளைவுட் / சன்மைக்கா பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 8000/- | 12000/- |
| 42 | அனைத்து வகையான வன்பொருட்களை (Hardwares) உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 8000/- | 12000/- |
| 43 | அனைத்து வகையான | 2000/- | 4000/- | 8000/- | 10000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | விளையாட்டு பொருட்களை உற்பத்தி செய்தல் | | | | |
| 44 | அனைத்து வகையான வேளாண் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 7500/- | 10000/- |
| 45 | அனைத்து வகையான உணவு எண்ணெய் உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 8000/- | 10000/- |
| 46 | பால் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 8000/- | 10000/- |
| 47 | டீ (Tea) தூள் தயாரித்தல் | 2500/- | 4500/- | 8000/- | 10000/- |
| 48 | காபி (Coffee) தூள் தயாரித்தல் | 2500/- | 4500/- | 8000/- | 10000/- |
| 49 | குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் | 2000/- | 4000/- | 7500/- | 10000/- |

## அட்டவணை II

[See rules 289(1), (2) and (5)]

1. **பொருந்தும் தன்மை**

(1). இந்த அட்டவணை எந்த ஒரு வர்த்தகம் அல்லது வியாபாரம் மேற்கொள்ளப்படுகிற அல்லது வாடிக்கையாளர்களுக்கு சேவைகள் அளிக்கப்படுகிற எந்த ஒரு கடை அல்லது வணிக நிறுவனத்திற்கும் அதே வளாகத்தில் உள்ளதோ அல்லது பிறவாறாக உள்ளதோ அத்தகைய வியாபாரம் தொடர்பாக பயன்படுத்தப்படுகிற சரக்கு அறைகள், கிடங்குகள் மற்றும் பண்டகசாலைக்கும் பொருந்தும்.

(2). பின்வரும் வகைப்பாடுகளுக்கு இந்த அட்டவணை பொருந்தாது:-

1. இந்த விதிகளின் மற்ற அட்டவணைகளில் குறிப்பிட்டுள்ள வகைப்பாடுகள்
2. 2013 ஆம் ஆண்டு நிறுமச் சட்டத்தின் கீழ் (2013-ஆம் ஆண்டு மத்திய சட்டம் 18) பதிவு செய்யப்பட்ட நிறுமங்கள், வங்கிகள், நிதி நிறுவனங்கள்.
3. சம்பந்தப்பட்ட சட்டங்களின் கீழ் உரிமம் பெற்ற உலாவல் மையங்கள் (Browsing centers) மற்றும் உடற்பயிற்சி கூடங்கள்.
4. 1959 -ம் ஆண்டு படைக்கல சட்டம் )1959 -ம் ஆண்டு மத்தியச் சட்டம் 54) 1884-ம் ஆண்டு வெடிபொருட்கள் சட்டம் )1884 -ம் ஆண்டு மத்தியச் சட்டம் IV மற்றும் (1934-ம் ஆண்டு பெட்ரோலிய சட்டம் )1984-ம் ஆண்டு மத்தியச் சட்டம் 30) மற்றும் 1952 -ம் ஆண்டு ஒளிப்பதிவு சட்டத்தின் கீழ் (1957 -ம் ஆண்டு மத்தியச் சட்டம் 37) உரிமம் பெற்ற வர்த்தகங்கள் மற்றும் வியாபாரங்கள்.
5. மருத்துவ நிறுவன சட்டம் (பதிவு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 2010 (2010 ஆம் ஆண்டுமத்திய சட்டம் 23)
6. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023அட்டவணை II-ல் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு உரிமம்வழங்கிட உரிமக்கட்டணம் நிர்ணயம்செய்திடஅட்டவணைப்படுத்தப்பட்டுள்ள குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச தொழில் உரிம கட்டணங்களுக்கான பட்டியல்.

**1) உரிமக்கட்டணம் (ஒருவருடத்திற்கானகட்டணம்)**

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 700/- | 10000/- |

**மேற்கண்ட அரசு விதிகளின்படி மாங்காடு நகராட்சியால் கீழ்க்கண்டவாறு தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.**

2) **வர்த்தகங்கள் மற்றும் வியாபாரங்கள் பட்டியல் :**

| வ. எண் | வர்த்தகங்கள் / வியாபாரங்கள் பட்டியல் | 01.09..2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | |
|---|---|---|---|
| | | சிறியது | பெரியது |
| 1 | அரசால் அனுமதிக்கப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | 5000-/ |
| 2 | தையல் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | 5000/- |
| 3 | தையல் இயந்திரங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500/- | 5000/- |
| 4 | அனைத்து வகையான கையால் செய்யப்பட்ட பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500/- | 4000/- |
| 5 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னணு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 3000/- | 9000/- |
| 6 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னணு பழுது நீக்கும் மற்றும் பழுது பார்க்கும் மையங்கள் | 1000/- | 5000/- |
| 7 | அனைத்து வகையான காகித பொருட்களையும் சேமித்து வைத்தல்செய்தல் மற்றும் விற்பனை . | 800/- | 5000/- |
| 8 | கழிவுத்தாள் கடை / பழைய வேண்டாத பொருட்கள் | 800/- | 5000/- |
| 9 | நூற்பு வேலைகள் | 750/- | 5000/- |
| 10 | அனைத்து வகையான இயந்திர எண்ணெய்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | 5000/- |
| 11 | காற்று பதனிகளை பழுது பார்த்தல் | 1000/- | 5000/- |
| 12 | காற்றழுத்திகள் (Air Compressors) | 1000/- | 5000/- |
| 13 | அனைத்து வகையான உலோகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000/- | 5000/- |
| 14 | எடை இயந்திர நிலையங்கள் (Weighing Macines) | 1000/- | 5000/- |
| 15 | பேட்டரி சார்ஜ் செய்கிற கடைகள் | 1000/- | 5000/- |
| 16 | மோட்டார் வாகன ஷோரூம்கள் | 5000/- | 9000/- |
| 17 | தலைக்கவச கடைகள் | 1500/- | 3000/- |
| 18 | இருசக்கர வாகனங்கள் மற்றும் மூன்று சக்கர வாகனங்களுக்கான ஆட்டோமொபைல் பழுதுபார்ப்பு மையங்கள் | 1000/- | 5000/- |
| 19 | இலகுரக மோட்டார் வாகனங்கள் மற்றும் கனரக மோட்டார் வாகனங்களுக்கான ஆட்டோமொபைல் பழுது பார்ப்பு மையங்கள் | 1500/- | 6000/- |
| 20 | அனைத்து வகையான மோட்டார்கள் மற்றும் பம்புகளையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | 6000/- |
| 21 | மோட்டார் வாகன உதிரி பாகங்களை சேமித்து | 1000/- | 5000/ |

| | | | |
|---|---|---|---|
| | வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | | |
| 22 | அனைத்து வகையான ஒப்பனை பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | 5000/ |
| 23 | அனைத்து வகையான தொழிற்சாலை இயந்திரங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | 6000/- |
| 24 | அனைத்து வகையான ரசாயன பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | 6000/ |
| 25 | பூச்சிக்கொல்லி மருந்துகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500/- | 5000/- |
| 26 | அனைத்து வகையான மருத்துவ உபகரணங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500/- | 4000/ |
| 27 | அனைத்து வகையான சலவை மற்றும் சுத்தம் செய்யும் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | 4000/ |
| 28 | அனைத்து வகையான கண்ணாடி பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | 4000/ |
| 29 | அனைத்து வகையான வன்பொருட்களையும் (Hardware's) சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 5000/ |
| 30 | அனைத்து வகையான ஆட்டோமொபைல் உதிரி பாகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 6000/ |
| 31 | அனைத்து வகையான எழுது பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | 4000/ |
| 32 | அனைத்து வகையான கட்டுமான பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 5000/ |
| 33 | அனைத்து வகையான ரப்பர் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | 4000/ |
| 34 | அனைத்து வகையான வீட்டு உபயோக உபகரணங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000/- | 4000/ |
| 35 | அணிகலன்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | 5000/ |
| 36 | இசைக்கருவிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | 3000/ |
| 37 | துப்புரவு பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் (தளவாட சாமான்கள்) | 1000-/ | 5000/ |
| 38 | அனைத்து வகையான தென்னை நார் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 750-/ | 5000/- |
| 39 | அனைத்து வகையான ஆடைகள் / துணிகள் / ஜவுளிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 5000/- |
| 40 | அனைத்து வகையான மறுப்பட்டை இடப்பட்ட (Retreading) டயர்கள் / டயர்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000-/ | 5000/- |
| 41 | அனைத்து வகையான கொள்கலன்கள் மற்றும் பாத்திரங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000-/ | 5000/- |

| | | | |
|---|---|---|---|
| 42 | அனைத்து வகையான மரச்சாமன்கள் (Furniture) அரைகலன்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | 6000/- |
| 43 | அனைத்து வகையான மர பிளைவுட். சன் மைக்கா பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000-/ | 5000/- |
| 44 | மர வடிவமைப்புகள் விற்பனை | 1000-/ | 5000/- |
| 45 | சாமியானா மற்றும் பாத்திரங்களை வாடகைக்கு விடுதல் | 1000-/ | 4000/- |
| 46 | அனைத்து வகையான தோல் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000-/ | 4000/- |
| 47 | கண் கண்ணாடிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000-/ | 5000/- |
| 48 | அனைத்து வகையான விளையாட்டு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000-/ | 5000/- |
| 49 | அனைத்து வகையான கைக்கடிகாரம் மற்றும் கைக்கடிகார உதிரி பாகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | 5000/ |
| 50 | அழைப்பிதழ்கள், வாழ்த்து அட்டை விற்பனை / அர்ச்சகம், கணிப்பொறி பதிப்பகம் உட்பட | 1000/- | 5000/- |
| 51 | மருந்து கடைகள் | 1000 | 5000/- |
| 52 | மருத்துவ உபகரணங்கள் / சாதனங்கள் மற்றும் உட்பொருத்திகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | 5000/- |
| 53 | மூங்கில், தென்னை ஓலை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | 4000/- |
| 54 | எரியக்கூடிய பொருட்கள், பிலிம் செல்லுலாய்ட் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 750/- | 4000/- |
| 55 | புல் மற்றும் வைக்கோல்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 750/- | 2000/- |
| 56 | முட்டுக் கொடுக்கும் பொருட்களை (Centering Materials) வாடகைக்கு விடுதல் | 750/- | 5000/- |
| 57 | அனைத்து வகையான வேளாண் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 750/- | 5000/- |
| 58 | அனைத்து வகையான உரங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | 5000/- |
| 59 | திரைப்பட செயலாக்கம் மற்றும் வண்ணமயமாக்கல் | 10000/- | |
| 60 | வாகன நிறுத்த நிலையங்கள் | 1000/- | 5000/- |
| 61 | திரைப்பட ஆய்வகங்கள் | 8000-/ | |
| 62 | பார்சல் புக் செய்யும் இடங்கள் / தூதர்கள் (Courier) சேவைகள் | 750/- | 5000/- |
| 63 | கேபிள் டிவி சேவைகள் | 1500/- | 5000/- |
| 64 | கேடயங்கள் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 750/- | 3000/- |
| 65 | உள்நாட்டு பட்டுப்புழு வளர்ப்பு பொருட்கள் | 1000/- | 4000/- |
| 66 | பட்டாணி வறுவல் | 750/- | 3000/- |

| | | | |
|---|---|---|---|
| 67 | ஃபேன்சி ஸ்டோர் | 750/- | 2000/- |
| 68 | பஞ்சு மெத்தை / தலையணை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | 3000/- |
| 69 | மிதிவண்டி பழுதுபார்க்கும் கடைகள் | 750/- | 2000/- |
| 70 | பல் பொருள் அங்காடி | 2000 | 5000/- |
| 71 | ஜெராக்ஸ் கடை, கணிப்பொறி பதிப்பக மையங்கள், இ-சேவை மையம் மற்றும் இணையம் நிலையம் | 1000 | 4000/- |
| 72 | ஸ்டிக்கர் கடைகள் | 800/- | 3000/- |
| 73 | தாவர நாற்றங்கால் கடைகள் | 750/- | 3000/- |
| 74 | புகைப்பட சட்டகம் செய்தல் (Photo Framing Works) | 750/- | 1500/- |
| 75 | தார்பாலின்களை சேமித்து வைத்தல் | 1000/- | 4000/- |
| 76 | பொற்கொல்லர்கள் | 750/- | 2000/- |
| 77 | அனைத்து வகையான துப்புரவு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் (கிருமி நாசினிகள்) | 1000/- | 4000/- |
| 78 | டைல்ஸ் / மார்பிள்ஸ் / மார்பில்கள் / கிரானைட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000/- | 5000/- |
| 79 | தீயணைப்பு உபகரணங்கள் மற்றும் சாதனங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | 3000/- |
| 80 | முடிவெட்டும் நிலையங்கள் | 800-/ | 2000/ |
| 81 | அழகு நிலையங்கள் / தடுப்பு சுவர்கள் அல்லது அறைகள் இல்லாத ஸ்பாஸ் (Spa's) | 2000/- | 5000/ |
| 82 | தையல் கடைகள் | 750/- | 2000/ |
| 83 | சலவையகங்கள் | 750/- | 2000/ |
| 84 | வினைல் போர்டு கடைகள் | 1000/- | 5000/ |
| 85 | காலனி கடைகள் | 750/- | 3000/- |
| 86 | கைப்பேசி கடைகள் (விற்பனை மற்றும் பழுதுபார்த்தல்) | 1000-/ | 3000/- |
| 87 | மிதிவண்டி மற்றும் உதிரி பாகங்கள் விற்பனை | 750//- | 3000/- |
| 88 | புகைப்படம் எடுக்கும் நிலையங்கள் | 750/- | 3000/- |
| 89 | திரைப்படங்கள் எடுக்கும் நிலையங்கள் | 7000/- | 10000/- |
| 90 | பதிவு செய்யும் நிலையங்கள் (Recording Theater) | 3000/- | 7500/- |
| 91 | அச்சகங்கள் | 1000/- | 3000/- |
| 92 | அனைத்து வகையான அச்சிடுதல்கள் | 1000/- | 3000/- |
| 93 | துணிகளை விற்பனை செய்தல் | 1000/- | 8000/- |
| 94 | நகைகளை விற்பனை செய்தல் | 2000/- | 10000/- |
| 95 | நெல் அவித்தல் | 750/- | 3000/- |
| 96 | மரம் அறுக்கும் ஆலைகள் | 800/- | 6000/- |
| 97 | FCS ஆலைகள் (Farm and commercial Storage Manufacturing) | 1000/- | 5000/- |
| 98 | அரிசி ஆலைகள் | 1500/- | 4000/- |
| 99 | பாக்கெட்டில் போடப்பட்ட கறியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | 4000/- |
| 100 | கோழி இறைச்சினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 750/- | 3000/- |
| 101 | ஆட்டு இறைச்சியை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | 4000/- |
| 102 | கோழி இறைச்சி ஆட்டு இறைச்சி சேமித்து வைத்தல் / மற்றும்விற்பனை செய்தல் | 1500/- | 5000/- |

| | | | |
|---|---|---|---|
| 103 | மாட்டு இறைச்சினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | 3000/- |
| 104 | கடல் உணவுகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | 3000/- |
| 105 | அனைத்து வகையான உணவுப் பொருட்களையும் தயார் செய்தல் | 1000/- | 4000/- |
| 106 | அனைத்து வகையான பால் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | 4000/- |
| 107 | அனைத்து வகையான உணவு எண்ணெய்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | 4000/- |
| 108 | அனைத்து வகையான உணவுப் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | 5000/- |
| 109 | அனைத்து வகையான நாட்டு மருந்துகள், ஒப்பனை மற்றும் மூலிகை பொருட்கள் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 750/- | 4000/- |
| 110 | மருத்துவ ஆய்வகங்கள் | 1000/- | 4000/- |
| 111 | அனைத்து வகையான செல்லப்பிராணிகள் கடைகள் | 2000/- | 5000/- |
| 112 | அனைத்து வகையான கால்நடைகள் பறவைகள் தீவனங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 800/- | 3000/- |
| 113 | காபி கொட்டை வறுத்தல் மற்றும் அரைத்தல் | 800-/ | 3000/- |
| 114 | காய்கறிகள் பழங்கள் மற்றும் பூக்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 750/- | 3000/- |
| 115 | அனைத்து வகையான மளிகை பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | 5000/- |
| 116 | பேக்கரிகள் | 750/- | 3000/- |
| 117 | பழச்சாறு கடைகள் | 800/- | 3000/- |
| 118 | AMF (Assured Minimum Facility) உடன் டீக்கடைகள் | 750/- | 2000/- |
| 119 | நீர்வாழ்வன காட்சிசாலை (Aquarium) | 5000/- | 10000/- |
| 120 | ஊற வைத்த தானியங்களை அரைத்தல் | 750/- | 2000/- |
| 121 | சுற்றுலா மற்றும் பயணங்கள் | 800/- | 4000/- |
| 122 | மண் அள்ளும் இயந்திரங்கள் | 1000/- | 4000/- |
| 123 | கட்டிட பொருட்களை வாடகைக்கு எடுத்தல் | 800/- | 3000/- |
| 124 | பட்டாசு சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | 5000/- |
| 125 | பெட்ரோல் பங்க் | 1000/- | 4000/- |
| 126 | சுத்திகரிப்பு செய்யப்பட்ட குடிநீர் விற்பணை மற்றும் இருப்பு வைத்தல். | 1000/- | 3000/- |
| 127 | இதர இனங்கள் | 1000/- | 5000/- |

## அட்டவணை III

[See rules 289(1), (2) and (5)]

**1. பொருந்தும் தன்மை :-**

(1). தெளிவாக வரையறுக்கப்பட்ட சமையலறை மற்றும் இருக்கை கூடங்களுடன் கூடிய உணவுக்கூடங்கள், சிற்றுண்டி சாலை அல்லது உணவகங்கள்

(2).1939-ஆம்ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதார சட்டத்தில் (1939ம் ஆண்டு தமிழ்நாடு சட்டம்வரையறுக்கப்பட்டுள்ளவாறான, வாராந்திர, மாதாந்திர, அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற தங்கும் இடங்கள் தங்கும் விடுதிகள், சத்திரம், மளிகை, விருந்தினர் இல்லம், தொண்டு அடுக்குமாடி குடியிருப்புகள்.

(3).திருமண மண்டபங்கள், விருந்து மண்டபங்கள் அல்லது பொதுக்கூடங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்கான அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுத்தப்படும் அத்தகைய மற்ற பொது கூட்டங்களாக பயன்படுத்தப்படுகிற அனைத்து பொதுக் கூட்டங்களுக்கும் பொருந்தும்.

**2. உரிமக்கட்டணம் (ஒரு வருடத்திற்கான கட்டணம்) :-**

(i). தெளிவாக வரையறுக்கப்பட்ட சமையலறை மற்றும் இருக்கை கூடங்களுடன் கூடிய உணவுக் கூடங்கள்சிற்றுண்டி சாலை அல்லது உணவகங்கள் விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிம கட்டணம் குறைந்தபட்சம் ரூ.1000/-, அதிகபட்ச கட்டணம் ரூ.15000/-

**மேற்கண்ட அரசு விதிகளின்படி மாங்காடு நகராட்சியால் கீழ்க்கண்டவாறு தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது**

**(ஒரு வருடத்திற்கானகட்டணம்):**

| **தொழில் விபரம்** | **01.09.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் (ரூ.)** | |
|---|---|---|
| சமையலறை மற்றும் இருக்கை கூடங்களுடன் கூடிய உணவுக் கூடங்கள் சிற்றுண்டி சாலை அல்லது உணவகங்கள் | சிறியது | பெரியது |
| | 1500/- | 5000/- |

ii) 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் முறைப்படுத்துதல் (2014-ஆம்ஆண்டு தமிழ்நாடு சட்டம 18) சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்டவை தவிர உள்ள விடுதிகள்.

"விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிம கட்டணம் குறைந்தபட்சம் ரூபாய் ரூ.1500/- அதிகபட்ச கட்டணம் ரூ.3500/-"

**மேற்கண்ட அரசு விதிகளின்படி மாங்காடு நகராட்சியால் கீழ்க்கண்டவாறு தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.**

**(ஒரு வருடத்திற்கானகட்டணம்):**

| **தொழில் விபரம்** | **01.09.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் (ரூ.)** | |
|---|---|---|
| (1) | (2) | |
| 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் முறைப்படுத்துதல் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்டவை தவிர உள்ள விடுதிகள் | சிறியது | பெரியது |
| | 1500/- | 3000/- |

iii) 1939- ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதார சட்டத்தில் (1939-ம் ஆண்டு தமிழ்நாடு சட்டம்வரையறுக்கப்பட்ட வாராந்திர, மாதாந்திர அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற தங்கும் இடங்கள், சத்திரம், மாளிகை விருந்தினர் இல்லம், தொண்டு அடுக்குமாடி குடியிருப்புகள், விதிகளில் குறிப்பிட அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிம கட்டணம் குறைந்தபட்சம் ரூபாய் ரூ.3000/- அதிகபட்ச கட்டணம் ரூ.30000/-

**மேற்கண்ட அரசு விதிகளின்படி மாங்காடு நகராட்சியால் கீழ்க்கண்டவாறு தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது**

**(ஒரு வருடத்திற்கானகட்டணம்):**

| **தொழில் விபரம்** | **01.09.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் (ரூ.)** | |
|---|---|---|
| 1939- ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதார சட்டத்தில் வரையறுக்கப்பட்ட வாராந்திர, மாதாந்திர அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற தங்கும் இடங்கள், சத்திரம், மாளிகை விருந்தினர் இல்லம், தொண்டு அடுக்குமாடி குடியிருப்புகள். | சிறியது | பெரியது |
| | 4000/- | 10000/- |

(iv) திருமண மண்டபங்கள், விருந்து மண்டபங்கள் அல்லது பொதுக் கூட்டங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுத்தப்படும் அத்தகைய மற்ற பிற பொதுக் கட்டடங்கள்விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம் குறைந்தபட்சம் ரூ.3000/- அதிகப்பட்ச கட்டணம் .ரூ -30000/-

**மேற்கண்ட அரசு விதிகளின்படி நகராட்சியால் கீழ்க்கண்டவாறு தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது**

**(ஒரு வருடத்திற்கானகட்டணம்):**

| **தொழில் விபரம்** | **01.09.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் (ரூ.)** |
|---|---|
| (1) | (2) |
| திருமண மண்டபங்கள் | பெரியது - ரூ.10000/-<br>சிறியது - ரூ.5000/- |
| விருந்து மண்டபங்கள் அல்லது பொதுக் கூட்டங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுத்தப்படும் அத்தகைய மற்ற பிற பொதுக் கட்டடங்கள் | ரூ.4000/- |

**அட்டவணை IV**

[See rules 282(11) & 286(2)]

**தனியார் வாகன நிறுத்தங்கள் மற்றும் நிழற்கூடங்களுக்கான**

i) **உரிமக்கட்டணம் ( ஒரு வருடத்திற்கான கட்டணம்) :-**
விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம் குறைந்தபட்சம் ரூ.2000/- அதிகப்பட்ச கட்டணம் .ரூ -30000/-

**மேற்கண்ட அரசு விதிகளின்படி நகராட்சியால் கீழ்க்கண்டவாறு தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.**

| **தொழில் விபரம்** | **01.09.2024 முதல் நிர்ணயம் செய்யக்கடும் கட்டணம் ரூ.** |
|---|---|
| (1) | (2) |
| தனியார் வாகன நிறுத்தங்கள் மற்றும் நிழற்கூடங்கள் | பெரியது - ரூ.4000/-<br>சிறியது - ரூ.2500/- |

ii) **தனியார் ஆடுவதை கூடங்கள் – இல்லங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணங்கள்)**
விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம் குறைந்தபட்சம் ரூ.2000/- அதிகப்பட்ச கட்டணம் .ரூ -20000/-

**மேற்கண்ட அரசு விதிகளின்படி நகராட்சியால் கீழ்க்கண்டவாறு தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது**

| **தொழில் விபரம்** | **01.09.2024 முதல் நிர்ணயம் செய்யக்கடும் கட்டணம் ரூ.** |
|---|---|
| (1) | (2) |
| தனியார் ஆடுவதை கூடங்கள் – இல்லங்கள் | பெரியது - ரூ.4000/-<br>சிறியது - ரூ.2000/- |

**அலுவலக குறிப்பு** – தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023-ல்தொழில் உரிமங்கள் வழங்குவது குறித்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் படி இந்நகராட்சி பகுதியில் இயங்கிவரும் தொழில்களுக்கு மேற்கண்ட விவரப்படி கட்டண விகிதத்தில் உயர்த்தி வசூலிக்க அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.12**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணிகளுக்காக M/s. Blooming Recycles நிறுவனம் மூலம் 52 DBC பணியாளர்கள் வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது., மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பந்தகாலம் 31.12.2024 உடன் முடிவடைவதால், பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி (இரண்டு மாத காலம்) ஒப்பந்தம் கோரலாம், அதற்கான தோராய செலவினம் தொகை ரூ.22.00 இலட்சத்திற்கு பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு-</u> மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி குறுகிய கால விலைப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.13**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கீழ்கண்ட இடங்களில் புதியதாக தெரு மின் விளக்குகள் பொருத்துவதற்கு மின்கம்பங்கள் அமைக்க தமிழ்நாடு மின்வாரியத்திற்கு இவ்வலுவலக ந.க.எண்.501/2024/இ1, 01.02.2024ன் படி கீழ்கண்ட இடங்களில் புதியதாக மின்கம்பங்கள் அமைக்க மதிப்பீடு தயாரித்து வழங்க கோரப்பட்டது. அதனை தொடர்ந்து, உதவி பொறியாளர்,இ&ப/ மாங்காடு, செ.மி.ப.வ/தெற்கு-1, மாங்காடு சென்னை-600122 அவர்களின் கடித எண்.உ.பொ./இ&ப/மாங்காடு/கே.தனி/அ.எண்.714/நாள்.26.09.2024ன்படி புதிய மின்கம்பங்கள் அமைக்க மின் இணைப்பு வேண்டி இணைய வழியில் பதிவு செய்யப்பட்டு மற்றும் அதற்கான பதிவு கட்டணம் ரூ.92693/- செலுத்த கோரப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் . பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வார்டு எண். | கம்பம் அமைப்பதற்கான இடம் | கம்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 2 | திருவள்ளுவர்சிட்டிபேஸ் 2, கோதண்டன்நகர், கிருபானந்த வாரியார், 1 வதுதெரு 4வதுதெரு சீனிவாசா நகர், பவானி அம்மன் சமயபுரம் நகர் மற்றும் இரகுநாதபுரம் | 12 |
| 2 | 3 | கணபதிநகர் , சக்தி நகர், வடக்கு ரகுநாதபுரம், பிரியம் அவென்யூ, காந்திதெரு, சக்தி நகர் அனெக்ஸ் | 15 |
| 3 | 4 | மாருதிநகர், கிழக்கு மீனாட்சிநகர், மேற்கு மீனாட்சி நகர், ஸ்ரீராம்நகர் | 10 |
| 4 | 11 | ஓம்சக்திநகர் 4வது குறுக்குதெரு மற்றும் 6 வது குறுக்குதெரு | 5 |
| 5 | 12 | வீரஆஞ்சநேயர்கோயில் 1வதுகுறுக்குதெரு முதல் 3வது குறுக்கு தெரு வரை, ஜெயகர் தெரு ராஜகுமாரி தெரு சையத்சாதிக்நகர் | 10 |

| | | | |
|---|---|---|---|
| 6 | 13 | 13வது வார்டு பகுதியில் மின்கம்பங்கள்அமைத்தல் | 5 |
| 7 | 5 | பத்ரிமேடு, சிடிஐ கார்டன், திருமாநகர், சாந்திநகர் காமாட்சிநகர், ஜீவாநகர் மற்றும் உருது பள்ளிஅருகில் | 25 |
| 8 | 15 | 15வது வார்டு பகுதியில் மின்கம்பங்கள்அமைத்தல் | 5 |
| 9 | 16 | சக்ரா நகர், அப்பாவு நகர், இவிபி ஸ்ரீராம் நகர்,சிவானந்தா நகர் | 7 |
| 10 | 18 | முத்துசாமி அவென்யூ, கொல்லைகாலனி, அம்மன் முருகன் நகர்,சீனிவாசா நகர், மேல்மா நகர், மாசிலாமணி நகர், சபரி நகர், மல்லிகா நகர், விசாலாட்சி நகர் | 30 |
| 11 | 21 | பாலமுருகன் நகர் 1வது 2 வது குறுக்கு தெரு மின்கம்பங்கள் அமைத்தல் | 2 |
| 12 | 23 | அண்ணாதெரு பகுதியில் மின் கம்பங்கள் அமைத்தல் | 5 |
| 13 | 25 | 25 வது வார்டு வன்னியர் பட்டு , இந்திரா நகர், எஸ்,கே,எம்,நகர், சாந்தி நகர், வி.எம்.எஸ்.நகர். சுல்தான் பேட்டை, காயிதே மில்லத் நகர் ஆகிய பகுதியில் மின்கம்பங்கள்அமைத்தல் | 10 |
| 14 | 26 | 26 வது வார்டு பகுதியில் மின்கம்பங்கள்அமைத்தல் | 8 |
| 15 | 27 | ஆர்.எஸ். கார்டன், அருணாச்சலம் நகர், எஸ்.கே.எம் .நகர், இந்திரா நகர், பானு நகர், | 20 |
| | | **மொத்தம்** | **169** |

அலுவலக குறிப்பு :-

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கும் செலவினம் ரூ.92693/- பொதுநிதியில் இருந்து மேற்கொண்ட்மைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.14**

இந்நகராட்சியில் பொறியியல் பிரிவின் கீழ் நடைபெறும் பல்வேறு திட்டப்பணிகள் மற்றும் பொதுநிதிப்பணிகளை கண்காணிக்கவும், மதிப்பீடுகள் மற்றும் பட்டியல் தயார் செய்யவும் தேவையான பணி ஆய்வர் பணியாளர்கள் ஏதும் நிரப்பப்படாததால் தினசரி பணிகளில் சிரமம் ஏற்படுகிறது. இதுபோல் பொறியியல் பிரிவின் கீழ் பராமரிக்கப்படும் ஈப்பு வாகனத்திற்கான ஓட்டுநர் மற்றும் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி இயக்குதல் பணிகளுக்கும் போதிய ஆட்கள் இல்லாததால் தற்போது ஒப்பந்த அடிப்படையில் ஆறுமாத காலத்திற்கு தொழில்நுட்ப உதவியாளர் இரு நபர்கள், இலகுரக ஓட்டுநர்கள் 3 நபர்கள் மற்றும் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளை இயக்க தேவையான மஸ்தூர் கிரேடு-I 3 நபர்களை பணியமர்த்தி கொள்ளவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.16.35 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | தொழில்நுட்ப உதவியாளர் (நிலை-II), ஓட்டுநர், மற்றும் மஸ்தூர் கிரேடு-I ஆகிய பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் ஆறுமாத காலத்திற்கு பணியமர்த்துதல் | 16.35 |

<u>அலுவலக குறிப்பு</u>:-

1) மேற்கண்ட பணிக்குண்டான செலவினம் ரூ.16.35 லட்சத்தினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி பணிக்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 20.11.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.15**

காஞ்சிபுரம் மாவட்டம் மாங்காடு நகராட்சி 2023-24 ஆம் ஆண்டின் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகள் குறித்த விவரத்தினை கடந்த 11.10.2024 அன்று தினத்தந்தி நாளிதழில் பிரசுரப்படுத்தியதற்குண்டான பட்டியல் தொகை ரூ.44100/-(The Daily Thanthi) என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மேற்கண்ட செலவினம் ரூ.44100/- பொதுநிதியில் வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.16**

இந்நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021-2022 ன்கீழ் நவீன எரிவாயு தகன மேடை அமைத்தல் பணிக்கு திருத்திய மதிப்பீடு ரூ.106.00 லட்சத்திற்கு மறு ஒப்பந்தப்புள்ளிகள் 19.09.2024ல் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்புந்தப்புள்ளிகள் வரப்பெற்று அதன் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021-22 | | | | |
| 1 | மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் நவீன எரிவாயு தகன மேடை அமைத்தல் பணி | 106.00 | M/s. M.H.T. ENGINEERING ENTEPRISES | மதிப்பீடு தொகையை விட **0.11%** குறைவு |
| | | | M/s. YES YES ENGINEERING | மதிப்பீடு தொகையை விட **0.02** % அதிகம் |

**அலுவலக குறிப்பு**:- மேற்படி பணியானது திட்டப்பணி என்பதாலும் பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்த்புள்ளி

விலைவிகிதம் வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் பார்வையிட்டு பதியலாம்.

**பொருள் எண்.17**

மாங்காடு நகராட்சியில் மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தில் காலை உணவு சப்ளை செய்யும் பணியை M/s. NO FOOD WASTE என்ற நிறுவனத்திற்கு 18.05.2023முதல் பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதற்கான ஒப்பந்த பணிக்காலம் 18.05.2024ல் முடிவடைந்த நிலையில் அதற்கான தீர்மானம் எண்.645 நாள்.22.08.2024 ன்படி ஆறு மாத காலங்களுக்கு (ஜூன் 2024 முதல் நவம்பர் 2024 வரை) பணி நீட்டிப்பு செய்து உத்தரவிடப்பட்டது. இந்நிலையில் தற்போது பணி உத்தரவு காலம் முடிவடைந்ததால் மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் வரை தற்போது அரசு பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் பணியில் தொய்வு ஏற்படா வண்ணம் மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி அப்பணியை மேற்கொள்ளும் M/s..NO FOOD WASTE நிறுவனத்திற்கு டிசம்பர் 2024 முதல் ஏப்ரல் 2025 வரையிலான ஐந்து மாதங்களுக்கு ஒப்பந்தத்தினை அதே விலை விகிதத்தில் (ரூ.12.60/ ஒரு குழந்தைக்கு) நீட்டிப்பு செய்தமைக்கு மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**-

**மேற்படி 1முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் பணியில் தொய்வு ஏற்படா வண்ணம் அவசர அவசியம் கருதி அப்பணியை மேற்கொள்ளும் M/s..NO FOOD WASTE நிறுவனத்திற்கு டிசம்பர் 2024 முதல் ஏப்ரல் 2025 வரையிலான ஐந்து மாத காலங்களுக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி நீட்டிப்பு செய்து பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.**

**பொருள் எண்.18**

இந்நகராட்சிக்கு சட்ட மன்ற அறிவிப்புகள் 2022-23 ஆம் ஆண்டின் கீழ் புதிய அலுவலக கட்டிடம் கட்டும் பணிக்கு திருத்திய மதிப்பீடு ரூ.214.30 லட்சத்திற்கு மறு ஒப்பந்தப்புள்ளிகள் 19.09.2024ல் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்புந்தப்புள்ளிகள் வரப்பெற்று அதன் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| சட்டமன்ற அறிவிப்புகள் 2022-23 | | | | |
| 1 | மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதிய அலுவலக கட்டிடம் கட்டும் பணி | 214.30 | M/s. THILLAI NATARAJA ROAD CONSTRUCTIONS PVT. LTD | மதிப்பீடு தொகையை விட **0.04%** குறைவு |
| | | | M/s. JAYAM ENTERPRISES | மதிப்பீடு தொகையை விட **4.34** % அதிகம் |
| | | | M/s. CVT ENTERPRISES | மதிப்பீடு தொகையை விட **5.83** % அதிகம் |

